மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

ஆறாந் தவணைப் பரீட்சை - 2024

தரம் 13 (2024)	இந்துசமயம் - 42-T- I	2 மணித்தியாலம்

பகுதி 1

❖ 1தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று எதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.

01) 1. இந்திரன் 2. வருணன் 3. சிவன் 4. பூசன் 5. சோமன்

02) 1. நம்மாழ்வார் 2. பேயாழ்வார் 3. இளையாழ்வார் 4. பெரியாழ்வார் 5.பூதத்தாழ்வார்

03) 1. சேயோன் 2. மாயோன் 3. முருகன் 4. ஸகந்தன் 5. வேலாயுதன்

04) 1. இயமம் 2. நியமம் 3. ஆசாரம் 4. ஆசனம் 5. சமாதி

05) 1. ஆத்திரேயர் 2. தன்வந்திரி 3. சரகர் 4. S.P தீட்சித் 5. சுஸ்ருதர்

❖ 06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.

06) 1. சிவாகமங்கள் - காமிகம்
2. வைணவம் - பஞ்சராத்திரம்
3. சாக்த ஆகமம் - தந்திரங்கள்
4. காணாபத்தியம் - வைகாசனம்
5. கௌமாரம் - குமாரதந்திரம்

07) 1. படைத்தல் - எழுத்தாணி பிடித்த கரம்
2. காத்தல் - மோதகம் இருக்கும் கரம்
3. அழித்தல் - அங்குசம் ஏந்திய கரம்
4. அருளல் - அமுதகலசம்
5. மறைத்தல் - பெரியசெவி

08) 1. கிருஸ்ணதேவராயர் - விஸ்ணுசித்தீயம்
2. சிவஞான முனிவர் - சிவஞானபாடியம்
3. கச்சியப்பமுனிவர் - தணிகைப்புராணம்
4. ஆண்டாள் - திருப்பாவை
5. திருமூலர் - திருவருட்பயன்

09) 1. யாழ்நூல் - விபுலானந்த அடிகள்
2. பெரியபுராண வசனம் - ஆறுமுகநாவலர்
3. சிவஞான சித்தியார் - அருணந்திசிவாச்சாரியார்
4. திருமந்திரம் - திருமூலர்
5. சிலப்பதிகாரம் - உமாபதிசிவாச்சாரியார்

10) 1. காளிதாசர் - இரகுவம்சம்
2. பாரவி – மேகதூதம்
3. ஈஸ்வரகிருஷ்ணர் - சாங்கிய காரிகை
4. ஆரியபட்டர் - ஆரியசதகம்
5. ஜெயதேவர் - கீதகோவிந்தம்

Past Papers Wiki

❖ 11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.

11)

அ	ஆ
1. சங்கரர்	A – மாண்டூக்கிய காரிகை
2. இராமானுஜர்	B – மத்துவபாஷ்யம்
3. மத்துவர்	C – மகாபாஷ்யம்
4. பாதராயனர்	D – ஸ்ரீபாஷ்யம்
5. கௌடபாதர்	E – பிரம்மசூத்திரம்

1. CDBAE 2. AECDB 3. CDAEB 4. CDBEA 5. BCDAE

12)

அ	ஆ
1. இரர்ஜராஜசோழன்	A – குடைவரைக்கோயில்
2. மகேந்திரவர்மன்	B – விஸ்ணுசித்தியம்
3. கிருஷ்ண தேவராஜர்	C – தஞ்சைபெருவுடையார்
4. சமுத்திரகுப்தன்	D – கங்கைகொண்ட சோழேச்சரம்
5. இராஜேந்திர சோழன்	E - பெரியகவி

1. CABED 2. CADBE 3. DEBAC 4. ACDBE 5. BDCEA

13)

அ	ஆ
1. பூர்வ ஆர்சிகம்	A – சதருத்திரியம்
2. ஆரண்ய காண்டம்	B - சாம வேதம்
3. சாந்தி பருவம்	C - இராமாயணம்
4. சுக்கில யசுர்	D - மகாபாரதம்
5. பௌஷ்டி காணி	E - அதர்வ வேதம்

1. BDACE 2. CBEDA 3. EDABC 4. BCAED 5. BCDAE

14)

அ	ஆ
1. திருக்களிற்றுப்படியார்	A - 53 வெண்பா
2. உண்மை விளக்கம்	B – 13 வெண்பா
3. வினாவெண்பா	C - 43 செய்யுள்
4. கொடிக்கவி	D – 100 வெண்பாக்கள்
5. திருவுந்தியார்	E – 04 வெண்பா

1. CBADE 2. DAEBC 3. DAEBC 4. ECADB 5. AEDBC

15)

அ	ஆ
1. ஆண் தெய்வ வழிபாடு	A – தரைப்பெண் வழிபாடு
2. பெண் தெய்வ வழிபாடு	B - கருட இலச்சனை
3. பலியிடல் வழிபாடு	C - வாளேந்திய ஆடவன்
4. பறவை வழிபாடு	D - கொம்புடைய காளை
5. நந்தி வழிபாடு	E - நடராஜர் வழிபாடு

1. CBDAE 2. EACBD 3. BACED 4. ECBAD 5. CBAED

❖ 16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

16) சிதம்பர மான்மியத்தை விளக்கும் புராணங்களில் ஒன்று

1) சேக்கிழார் புராணம் 2) கோயிற்புராணம் 3) கந்தபுராணம்
4) பெரியபுராணம் 5) அரிச்சந்திர புராணம்

17) நீள்வட்டப் பாதை பற்றிக் கூறும் வானியல் கோட்பாடு?

1) புளிச கோட்பாடு 2) பிதாமககோட்பாடு 3) சூரிய கோட்பாடு
4) சந்திர கோட்பாடு 5) தைவதகோட்பாடு

18) "பற்றற்ற மனமும் உண்மையான அன்பும் இறைவனை அடையும் வழி" எனக் கூறியவர்
1) விவேகானந்தர் 2) விபுலானந்தர் 3) ஆறுமுகநாவலர் 4) இராமகிருஷ்ணர் 5) நாரதர்

19) ஆத்திசூடியின் காப்புச் செய்யுளில் போற்றப்படும் கடவுள்
1) விநாயகர் 2) ஔவையார் 3) சிவபெருமான் 4) சரஸ்வதி 5) அதியமான்

20) புருடன் பிரகிருதி எனும் இரு பதார்த்த விளக்கமுடைய தத்துவக் கொள்கையும் அதன் ஆசிரியரும்
1) சாங்கியம் - கபிலர் 2) சாங்கியம் - பதஞ்சலி 3) யோகம் - பதஞ்சலி
4) ஸ்ரீபாஷியம் - கபிலர் 5) ஸ்ரீபாஷ்யம் - இராமானுஜர்

21) பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் நூல்
1) தொல்காப்பியம் 2) பரிபாடல் 3) கலித்தொகை
4) திருமுருகாற்றுப்படை 5) புறநானூறு

22) தெளிவு குருவின் திருமேனி காண்டல்...." என்ற பாடலடி இடம் பெறும் நூல்
1) திருமந்திரம் 2) திருக்குறள் 3) பெரியபுராணம்
4) கந்தபுராணம் 5) திருமுருகாற்றுப்படை

23) திருஞானசம்பந்தரின் சம காலத்தில் வாழ்ந்த இரு நாயன்மார்கள்
1) அப்பர், கண்ணப்பர் 2) சுந்தரர், மாணிக்கவாசகர்
3) அப்பர், காரைக்காலம்மையார் 4) அப்பர், மங்கையற்கரசியார்
5) காரைக்காலம்மையார், திலகவதியார்

24) கோயிற் புராணத்தை பாடியவர்
1) சபாபதி நாவலர் 2) இளமுருகனார் 3) சிவநந்தையார் 4) கச்சியப்பர் 5) உமாபதி

25) ஆணவத்தின் குணங்களில் அல்லாதது ஒன்று
1) அழுக்காறு 2) மோகம் 3) குரோதம் 4) விகற்பம் 5) கற்பம்

26) சங்கரர் கயிறு பாம்பு என்ற உதாரணத்தின் மூலம் பிரமம் உண்மை என்று நிரூபிக்க மேற்கொண்ட வாதம்
1) ஏகான்ம வாதம் 2) விவர்த்த வாதம் 3) மாயாவாதம்
4) பிரதிவிம்ப வாதம் 5) பரிணாமவாதம்

27) விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள் பற்றிக் கூறும் நூல்
1) மானசாரம் 2) வாஸ்து சாஸ்திரம் 3) விஷ்ணு தர்மோத்திரம்
4) மயமதம் 5) சாக்தாகமம்

28) சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1) 1888 2) 1992 3) 1955 4) 1930 5) 1902

29) நவீன தகவல் தொழில் நுட்பத்தில் அடங்காத ஊடகம்
1) இணையம் 2) முரசறைதல் 3) இறுவட்டு. 4) ஒலிநாடா 5) தொலைநகல்

30) பஞ்சலோகத்தில் முதன் முதலில் படிமக்கலை வார்க்கப்பட்ட காலம்
1) நாயக்கர் காலம் 2) சோழர் காலம் 3) பல்லவர் காலம்
4) சங்க காலம் 5) ஐரோப்பியர் காலம்

31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவு செய்க

31) சிவஞானபோதம்
1) சிவஞானபோதம் மெய்கண்டரால் பாடப்பட்டதாகும்.
2) சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூலாகும்.
3) மெய்யறிவைத் தரும் நூல்களில் ஒன்று.
4) 12 சூத்திரங்களை கொண்டது.
5) சித்தாந்த உண்மைகளை முதன்முதலில் கோட்பாட்டு ரீதியில் முன்வைத்த நூலாகும்.

PAST PAPERS WIKI

32) ஆறுமுகநாவலரின் சைவசமயப் பணிகள்.
1) சமயப்பிரசங்கம் செய்தமை.
2) புராணபடன மரபுக்கு வித்திட்டமை
3) சமய நூல்களை பதிப்பித்து வெளியிட்டமை
4) "இந்து சாதனம்" என்ற பத்திரிகை வெளியிட்டமை.
5) சைவ பாடசாலைகளை நிறுவியமை

33) சிவராத்திரி காலம்
1) சிவனின் விரத காலம்
2) கண்ணப்பர் பூசித்த காலம்
3) இலிங்கோற்பவ காலம்
4) அடிமுடி தேடிய காலம்
5) ஆன்மாக்கள் அருள் பெறும் காலம்

34) நடராஜ மூர்த்தம்
1) சிவமூர்த்தங்களில் ஒன்று.
2) சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவது.
3) மார்கழி திருவாதிரையுடன் தொடர்பற்றது.
4) ஆதியும் அந்தமும் இல்லா பரம்பொருள் தத்துவத்தை உணர்த்துவது.
5) ஆலயங்களில் ஆடல் வல்லானாகச் சிறப்பிக்கப்படுவது.

35) சாக்த நெறி
1) உஷை, ராத்திரி, சவித்திரு பெண்ணாக வருணித்தமை.
2) மார்க்கண்டேய புராணம் - தேவிமகாத்மியம்.
3) கனகதாரா தோத்திரம் - குமரகுருபரர் பாடியது.
4) திருமுருகாற்றுப்படையில் கொற்றவை பற்றிய கருத்து
5) சாக்த தந்திரங்கள் 77 ஆகும்.

மேல்வரும் பகுதியில் A - J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 :- 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A சிலாபரீட்சனம்	B பதமுத்தி	C திருமூலர்	D தவப்பெண்	E ஸ்ரீவைகுண்டம்
F அக்கமணி	G செந்நாப்போதர்	H அப்பிரசித்தி	I சுக்கிரநீதி	J திருமந்திரம்

36) சைவநாற்பாதங்கள் கூறும் முத்தியுடன் தொடர்புடையவை
1) BF 2) AF 3) DI 4) CI 5) BG

37) தமிழ் நீதி நூல்களுடன் தொடர்புடைய தொகுதி
1) AB 2) CF 3) AI 4) EJ 5) DG

38) திருவுருவ அமைப்புக்களுடன் தொடர்புடைய தொகுதி
1) AI 2) BF 3) CA 4) EF 5) IJ

39) விசிட்டாத்துவைதத்துடன் தொடர்புடைய தொகுதி
1) BI 2) DJ 3) AG 4) DH 5) EH

40) பத்தாம் திருமுறையுடன் தொடர்புடைய தொகுதி.
1) AB 2) CJ 3) CD 4) DI 5) EJ

❖ 41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

41. நகுலேஸ்வரம்

1) புராதன சிவாலயங்களில் ஒன்றாகும்.
2) திருத்தம்பலேஸ்வரம் என கீரிமலையில் அமைந்துள்ளது.
3) இலங்கையில் வடக்கே கீரிமலையில் அமைந்துள்ளது.
4) ஆடி அமாவாசையன்று பதிர்கடன் செய்யும் புனித இடமாகும்.
5) நகுலமுனிவர் தவம் செய்து கீரிமுகம் நீங்கப் பெற்ற தலமாகும்.

42. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்சமூகப் பணி

1) அகராதிகளைப் பதிப்பித்தமை.
2) கதாப்பிரசங்களை செய்தமை.
3) சைவ தூஷண பரிகார வெளியீடுகள்
4) கஞ்சித் தொட்டித் தருமம் மேற்கொண்டமை.
5) வித்தியாநுபாலன யந்திரசாலைகளை நிறுவியமை.

43. கோயிற்கிரியைகள்

1) ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டமை.
2) ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும்.
3) திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டவை.
4) அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுபவை.
5) கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நால்வகைப்படும்.

44. சங்கர வேதாந்தத்தின் முக்கிய கோட்பாடு

1) மாயையால் உலகம் தோன்றியது.
2) ஜீவாத்மாக்கள் பந்தப்பட்டவை.
3) பிரமமே உண்மைப் பொருள்
4) ஈஸ்வரன் படைப்புக் கடவுள்
5) ஞர்னமே விடுதலைக்கு வழி.

45. சேயோன் மேய மைவரை உலகமும்

1) சங்க இலக்கியங்களில் முருகன் போற்றப்படல்.
2) முருகன் கொற்றவையின் மகன் எனக் குறிக்கப்படுகின்றன.
3) முருகக் கடவுள் சேயோன் என அழைக்கப்படுகின்றார்.
4) பண்டைத் தமிழகத்தில் முருகன் முக்கிய கடவுளான வழிபடப்பட்டார்.
5) குறிஞ்சி நிலத்க்குரிய கடவுளாக முருகன் வழிபடப்பட்டார்.

Past Papers Wiki

46. பஞ்சாட்சர மந்திரம்

1) தூய்மையான இடத்தில் உடற்தூய்மையுடன் ஒதுதல்.
2) காலை, மாலை என இருவெளையும் ஒதுதல் வேண்டும்.
3) அகத்தை அணியும் ஐந்தெழுத்து மந்திரம் சிவசின்னமாகும்.
4) தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் என இருவகைப்படும்.
5) பிறவிப்பயனை நீக்கும் முகமாக இம்மந்திரத்தை ஒதுவார்கள்.

47. மாயை

1) உலகத் தோற்றத்துக்கும் ஒடுங்குவதற்குமான முதற் காரணமாக அமைவது.
2) மாயை இருவகைப்படும்.
3) மாயா காரியங்களாக தனு, கரண, புவன, போகம் என்பனவாகும்.
4) மாயையிலிருந்து 36 தத்துவங்கள் தோற்றம் பெறுகின்றது.
5) ஆன்மா முத்தியடைவதற்கு துணைபுரிகிறது.

48. சைவசித்தாந்த கன்மக் கொள்கையின் முக்கியத்துவம்.

1) பிறவிகள் தோறும் தொடர்ந்து வருதல்.
2) புண்ணிய பாவங்களுக்கு காரணமாதல்
3) தனிமனித ஒழுங்கையும் சமூக ஒழுங்கையும் நெறிப்படுத்துதல்.
4) பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் என மூவகைப்படும்.
5) மனம், வாக்கு காயம் எனும் மூன்று வழிகளில் ஆற்றுப்படுதல்.

49. கண்ணகி வழிபாடு

1) கிராமியப் பெண் தெய்வ வழிபாட்டில் முதன்மையானது
2) இலங்கையில் கஜபாகு மன்னனால் செல்வாக்குப் பெற்றது.
3) கண்ணகி வழிபாட்டில் கொம்புமுறித்தல் சடங்கு இடம் பெறுகிறது.
4) கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது.
5) ஒழுக்கத்தை முதன்மைபடுத்துவதே கண்ணகி வழிபாட்டின் அடிப்படை

50. சங்ககால வானியலும் கணிப்பும்.

1) சங்க இலக்கியங்களில் வானியல், சோதிடம் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
2) கோள்களின் இயக்கங்களைக் கணித்து நடக்க போவதை கூறும் கணியங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
3) வானத்தில் இராசி தோறும் ஞாயிறு பெயர்ந்து செல்லல் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.
4) சங்க இலக்கியங்களில் இடம் பெறும் திங்கள், பட்சம், நாள் என்ற பதங்கள் வானியலுடன் தொடர்புடையவை.
5) சங்ககால மக்கள் கோள்கள், திரிந்து வரும் நாண்மீன்கள் பற்றி அறிந்திருந்தனர்.

Past Papers Wiki

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

ஆறாந் தவணைப் பரீட்சை - 2024

தரம் 13 (2024)	இந்துசமயம் - 46 – T - II	3 மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்:
பகுதி 1 இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி 11 இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி 1

1. இந்துசமய வளர்சியில் வேதங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை பின்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக

அ. வேதம் என்ற சொல்லின் பொருள் (2 புள்ளிகள்)
ஆ. வேதங்களின் சிறப்பம்சங்கள் (6 புள்ளிகள்)
இ. வேத கால இயற்கை வழிபாடு (6 புள்ளிகள்)
ஈ. வேதங்களின் முக்கியத்துவம் (6 புள்ளிகள்)

2. இந்துசமய தத்துவ சிந்தனைக்கு உபநிடதங்களின் மூல ஊற்றுக்களாகும். இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை பின்வரும் தலைப்புக்களில் விளக்குக

அ) உபநிடதம் என்பதன் பொருள் (2 புள்ளிகள்)
ஆ) உபநிடதம் கூறும் மகாவாக்கியங்கள் (6 புள்ளிகள்)
இ) உபநிடதம் கூறும் பிரமம் (6 புள்ளிகள்)
ஈ) உபநிடதம் கூறும் ஆன்மா (6 புள்ளிகள்)

3. தமிழக வரலாற்றில் சோழர் காலம் பொற் காலம் ஆகும். இக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க

அ. சோழ அரசர்களின் பங்கும் பணியும் (4 புள்ளிகள்)
ஆ. சோழர் கால சைவ சமய வளர்ச்சி (6 புள்ளிகள்)
இ. சோழர் கால கோயில்களும் நுண்கலைகளும் (6 புள்ளிகள்)
ஈ. சோழர் கால இலக்கியங்கள் (4 புள்ளிகள்)

பகுதி II

4. "வேதாந்த தத்துவ வளர்ச்சியில் விசிட்டாத்வைதம் தனித்துவம் மிக்கது" இக்கூற்றினை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க

அ) விசிட்டாத்வைதம் என்பதன் பொருள் (2 புள்ளிகள்)
ஆ) விசிட்டாத்வைதக் கோட்பாட்டின் சிறப்பம்சம் (6 புள்ளிகள்)
இ) சங்கரரின் கோட்பாடு விசிட்டாத்வைதக் கோட்பாட்டுடன் வேறுபடும் விதம் (8 புள்ளிகள்)
ஈ) இராமானுஜர் கூறும் முத்தி (4 புள்ளிகள்)

5. இந்துசமய மரபில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துத்தினை மேல்வரும் தலைப்புகளினூடாக விளக்குக.

அ. ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம் (2 புள்ளிகள்)

ஆ. சிவாகமங்களின் சிறப்பு (6 புள்ளிகள்)

இ. ஆலய நிர்மாணமும் திருவுருவ அமைப்பும் (6 புள்ளிகள்)

ஈ. சிவாகமம் கூறும் சித்தாந்த சிந்தனைகள் (6 புள்ளிகள்)

6. இலங்கையில் இந்துசமய வளர்ச்சிக்கு சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்புகளை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க

அ. சமயப்பணி (5 புள்ளிகள்)

ஆ. கலைப்பணி (5 புள்ளிகள்)

இ. கல்விப்பணி (5 புள்ளிகள்)

ஈ. சமூகப்பணி (5 புள்ளிகள்)

7. "சைவசித்தாந்தத்தில் மாயை ஓர் உள்பொருளாகும்" என்ற சைவசித்தாந்தக் கொள்கையை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக

அ. மாயைஎன்பதன் விளக்கம் (5 புள்ளிகள்)

ஆ. மாயையின் இயல்புகள் (5 புள்ளிகள்)

இ. சுத்தமாயை (5 புள்ளிகள்)

ஈ. பிரகிருதி மாயை (5 புள்ளிகள்)

8. இலங்கையின் இந்துசமய வரலாற்றில் மேல்வரும் சிவாலயங்கள் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக

அ) திருக்கோணேச்சரம் (10புள்ளிகள்)

ஆ) முன்னேச்சரம் (10புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library